முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 177/2015

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 08 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜு | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பிரமணியம் | கிராமம் | : இலுவம்பாளையம் |
| வயது | : 64 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 08-01-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் 78 செண்ட் சொத்தை 68 செண்ட், 10 செண்ட் என 2 அயிட்டமாக கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 68 செண்ட்டின் செக்குபந்தியாக மயில்சாமி, பழனிச்சாமி பூமிக்கு வடக்கு, கண்ணம்மாள் நிறுத்திக் கொண்ட பூமிக்கு தெற்கும், கிழக்கும், பழனிச்சாமி பூமிக்கும் மேற்கு என கண்டுள்ளது என்றால் சரிதான். 10 செண்ட் பூமிக்கு செக்குபந்தியாக நான் கிரயம் பெறும் பூமிக்கு வடக்கு, மெயின்ரோட்டுக்கு தெற்கு, கண்ணம்மாள் விட்டுள்ள 20 அடி வண்டித்தடத்திற்கும் கிழக்கு, கண்ணம்மாள் பூமிக்கும் மேற்கு என கண்டுள்ளது என்றால் சரிதான்.

2. 10 செண்ட் பூமி மெயின் ரோட்டுக்கு நேர் தென்புறத்தில் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்., 10 செண்ட் ஒட்டி 68 செண்ட் பூமி உள்ளது என்றால் சரிதான். மெயின்ரோட்டில் இருந்து 10 செண்ட் இடத்தின் வழியாக 68 செண்ட் பூமிக்கு செல்லலாம் என்றால் குழியாக உள்ளது. குழியை நிரப்பினால் செல்லலாம். 10 செண்ட் மற்றும் 68 செண்ட் பூமி என் வசம் தான் உள்ளது என்றால் சரிதான். நான் தடம் என கோரி உள்ள இடத்திற்கு தென்புறம் 68 செண்ட் பூமி உள்ளது என்றால் சரிதான்.

3. நான் 68 செண்ட் கிரயம் பெற்ற ஆவணத்தில் கண்ணம்மாள் நிறுத்திக் கொண்ட இடத்திற்கு தெற்கும், கிழக்கும் என கண்டுள்ளது என்றால் சரிதான். கண்ணம்மாள் நிறுத்திக் கொண்ட இடம் என்பதை ஒத்துக் கொண்டு நான் கிரயம் பெற்றுள்ளதால் தற்போது அதை தடமாக கேட்க முடியாது என்றால் சரியல்ல. என்னுடைய கிரய ஆவணத்தில் தடபாத்தியம் தனியாக எழுதவில்லை என்றால் சரிதான். ஆனால் 68 செண்ட்டுக்கு தடம் உள்ளது. மாமூல் தடம் என்று தனியாக குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான்.

4. என்னுடைய கிரய ஆவணத்தில் வாதியின் பூமி வழியாக நடந்து கொள்ளலாம் என்று குறிப்பிட்டு எழுதப்படாததாலும், எனக்கு பாத்தியப்பட்ட மெயின்ரோட்டுக்கு அருகே உள்ள 10 செண்ட் பூமி உள்ளதால் அதன் வழியாக 68 செண்ட் பூமிக்கு செல்லலாம் என்பதால் தட பாத்தியம் குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரியல்ல. என் கிரய ஆவணத்தில் கண்ணம்மாள் நிறுத்திக் கொண்ட பூமிக்கு தெற்கு, கிழக்கு என்று உள்ளதை மறைத்து தாவா தாக்கல் செய்து ஆவணத்திற்கு எதிராக வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. 20 அடி தடம் எதுவும் இல்லை நான் பொய்யாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 20 அடி தடபாத்தியம் வேண்டும் என்று கோரி தாவா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தடத்திற்கு போகவும் கேட்டுள்ளேன். தாவாச் சொத்து வாதியின் சுவாதீன அனுபவத்தில் உள்ளது வாதியின் இடத்தை நான் தடமாக கேட்க முடியாது என்றால் சரியல்ல. தடமாகத் தான் பயன்படுத்தி வருகிறேன். தாவாவில் வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.01.08 15:52:44 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.